**In the Court of the District Munsif, Eraniel**

Original Suit No. 96/2016 Date:31.01.2025

(P.W.1)-பரூக்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் டுடோரியல் ஆரம்பித்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த வகுப்பிலிருந்து எந்த வகுப்பு வரை வகுப்பு எடுத்தேன் என்றால் 3-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையாகும். மேற்சொன்ன டுடோரியலில் நான்மட்டும்தான் ஆசிரியரா என்றால் இல்லை வேறு சில ஆசிரியரும் உள்ளார்கள். மேற்சொன்ன டுடோரியல் இயங்கிவரும் இடம் எனக்கு சொந்தமான இடமா அல்லது வாடகை இடமா என்றால் வாடகை இடமாகும். வாடகை இடத்தில் நான் டுடோரியல் ஆரம்பித்தற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் மேற்சொன்ன இடத்தில் டுடோரியல் நடத்திவருகிறேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் என் வழக்குரையில் Orient English academy-யை பள்ளி என்றுதான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன Orient English academy, Orient School-ஆக 1997 ஆம் வருடம் மாற்றப்பட்டது என்றால் சரிதான். Orient English academy-ல் மழலையர் வகுப்பு எந்தவருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 1998 -ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

2. மேற்சொன்ன Orient English academy குளச்சல் - இராஜாக்கமங்கலத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன Orient English academy ஆரம்பிக்கப்பட்ட இடம் பாத்திமா பீவீ என்பவருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். மேற்சொன்ன Orient English academy நாங்கள் பதிவு செய்யப்பட்ட

(P.W.1)-பஞக்

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

ISSK50/86 -ன் கட்டுப்பாட்டின்கீழ் சொசைட்டியின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி Orient English academy ஆரம்பிக்கப்பட்ட இடமானது பாத்திமா பீவீ சென்டிற்கு ரூ.5,000 வீதம் 12 சென்ட் விலை பேசி விலையாவணம் ஏற்படுத்தப்பட்ட அதன்பிறகுதான் தொடங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன Orient English academy-ல் ஆரம்பிக்கப்பட்ட மழலையர் வகுப்பு மேற்சொன்ன சொத்தை வாங்குவதற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படிபாத்திமா பீவீக்கு உரிமைப்பட்ட 17.1/2 சென்ட் சொத்தை 12.05.1995-ஆம் அன்றுதான் வாதி விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி சொத்தில்தான் மழலையர் வகுப்பு ஓலை குடிசையில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல் (பொறுப்பு)